# அப்ப, இஸ்

thiruchchikkaaran

//நிற்க , இப்ப நம்ப விஜெயேந்திராள், தமிழ்த் தாய் வாழ்த்து பாடும் போது, அவாளும் சேர்ந்து பாடாம கண்ணை மூடிண்டு உட்கார்ந்து இருந்துட்டா. அது தியானம் என்றுய மடம் அபீசியலா டிக்ளேர் பண்ண ,ய அதுதான் மிகச் சிறந்த மரியாதை என்றும் பல பரிவார எழுத்தாளர்கள் சொல்ல-யஅப்ப அதே ரூல் தான் இஸ்லாமிய சகோதரருக்கும் அப்ளை ஆகும்//பூ€வந்தே மாதரம்பூ€ய இந்தப் பாடலைக் கேட்கும்போதே,ய யமுழு நிலவுயதன்னொளி வீச, நறுமண மலர் பூத்த சோலையில்ய நடந்து செல்லும் அமைதி உண்டாகும். ஒரே நேரத்தில் இனிமையையும் நம்பிக்கை உணர்வையும் மனதில் அள்ளித் தெளிக்கும் பாடல் இது, நம் நாட்டின் மீதான பெருமிதத்தை வெளிப்படுத்தும்.இது என்னுடைய அனுபவம் . இதே எண்ணம் எல்லாருக்கும் வரும் என நான் எதிர்பார்க்க முடியாது. இந்தப் பாடலை எல்லோரும் பாடித்தான் ஆக வேண்டும் என நான் சொன்னால் அதுய யநாகரீகமாக எனக்குப் படவில்லை. இந்தப் பாடலைப் பாடுவதற்கு இஸ்லாமிய சகோதரர்களில் பலருக்கோ சிலருக்கோ சங்கடங்கள் இருக்கலாம்.அதை இந்துவாக இருந்து நான் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். இஸ்லாமிய சிந்தனைகளில் மனம் ஆழமாக செல்லும் போதுதான் அதை என்னால் உணர முடியும்.இஸ்லாமின் மிக முக்கிய கோட்பாடு பூ€வேறு கடவுள் இல்லை, அல்லா ஒருவர்ய யமட்டுமே கடவுள்பூ€ என்பதாகும். பூ€முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ) கடவுளின் கடைசி தூதுவர்பூ€ என்பதும் அவர்களின் முக்கிய கோட்பாடாகும்.இந்திய ஆன்மீக வாதிகள் எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும்,ய அது நிலையானதா, நிலையற்றதா (அநிக்கா, நிக்கா பூ€ அநித்யா, நித்யா) என்று இந்த இரண்டில் எந்த ஒன்று என்று பிரித்துப் பார்ப்பார்கள்.ஆனால் இஸ்லாத்தில் இரண்டாகப் பிரிப்பது- படைத்தவன் பூ€ படைப்பு- என்பதாகும். எல்லாவற்றையும் படைத்தவன் ஒருவனே, அவனைத் தவிர மிச்ச எல்லாம் வெறும் படைப்புகளே என்று பிரித்துப் பார்ப்பார்கள். அப்படி எண்ணும் போது படைத்தவன் மீது அவர்களுக்கு மனதில் அந்த அளவு ஒரு அன்பும் மரியாதையும் , பக்தியும், மட்டுமல்ல அச்சமும் வரும். இவ்வளவு சிறப்புகளை உடைய படைத்தவன் ஒருவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவனாவான். மற்ற எதற்கும் வணக்கம் செலுத்துவது அவசியமில்லாதது, தகுதியில்லாதது, தவறானது, குற்றம், மிகப் பெரும் பாவம் என்பது இஸ்லாமியர்கள் உறுதியாக நம்பும் கோட்பாடுஅது மட்டும் அல்ல, ஏக இறைவனான அல்லவைத் தவிர மற்றொருவரை வணங்கினால்யஇறைவனுக்கு இணை வைத்த ஷிர்க் குற்றம் செய்தவர் ஆவர்.அதற்க்கு தண்டனை என்னவென்றால் மறுமையில் நரகத்தில் அவர்கள் தோல்கள் கருக்கப் படும். புதிய தோல்கள் தரப்பட்டு அந்த தோலும் கருக்கப் படும்.மறுமையில் நரகத்தில் இருக்கும் நெருப்பானது, இங்கே இருக்கும் நெருப்பை போல அறுபது மடங்கு கொதிப்பாக இருக்கும். இதை எல்லாம் அப்படியே அப்பட்டமான உண்மையாக கருதி இறைவனுக்கு அஞ்சி வாழ்வது இஸ்லாம் ஆகும்.யஇந்த வாழ்க்கை கொஞ்ச வருடம் , மறுமை வாழ்க்கை முடிவில்லாதது அப்ப முடிவில்லாதா நரக நெருப்பில் உடல் தினமும் கருகுமோ என்று அஞ்சிக் கொண்டு இருப்பவர்கள் பலர்.யஎன்னிடத்தில் வந்து உன்னைய நெருப்பில் கருக விட மாட்டேன் என்று அவர்கள் சொல்லும் போது , எனக்கே ஒரு வேளை இவங்க சொல்றது உண்மையா இருந்துட்டா என்ன ஆகும் என்கிற அச்சம்யகண நேரம் தோன்றியது என்றால் அவர்களுக்கு எப்படி இருக்கும்?இவர்களிடம் யபோய் வந்தே மாதரம் பாடச் சொல்கிறார்கள் என்றால், அவர்களுக்கு இஸ்லாமியரின் மன நிலை என்ன என்று தெரியவில்லை என்றுதான் அர்த்தம். அப்படி அவர்களை கட்டாய படுத்தி வேறு வழியில்லாமல் பாட வைப்பதால் இவர்கள் அடைவது

என்ன?அதற்கு பதில் பூ€ நாம எப்படி அல்லாஹுத்த யஆலாவைய மதிக்கிறோமோ அப்படித்தான் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவையும், பரமபிதாவையும், (கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மேரி மாதாவையும்) , இந்துக்கள் முருகன், சிவன், விஷ்ணு பூ€ ஜெள்ளிட்ட பல கடவுள்களை மதிக்கிறார்கள். இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் தான் நம்பும் நம்பிக்கையின் படி நடக்க விடுவதுதான் நாகரீகம், பிற மதக் கடவுள் வழிபாட்டை வெறுக்காமல் மதிக்க வேண்டும்பூ€ என்கிற நல்லிணக்க மனநிலையை இஸ்லாமிய சிந்தனையாளர்கள் பெற்று அதை பிரச்சாரம் செய்தால் அனைவரும் அவர்களை ஆரத் தழுவுவர். இந்த பிரச்சாரத்தை இந்திய இஸ்லாமிய சிந்தனையாளர்கள் மற்ற நாட்டுக்கும் பரப்பினால் உலகம் முழுமைக்கும் நல்லது. இதற்கான கல்வித் திட்டத்தை உருவாக்க வேண்டும். பள்ளிகளில் எல்லா மதத்தினரின் வழி பாட்டுத் தலங்களையும் சிறிய அளவிலாவது கட்டுங்கள். பெரியாரின் சிலையும் வைத்து கடவுள் மறுப்புக் கொள்கைக்கும் இடம் கொடுங்கள். இது நாகரீகம், பண்பாட்டை உருவாக்கும்.ய யமத, இன , மொழி, வர்க்க, சாதி பேதங்களை விட்ட நட்பை உருவாக்கும். இதைச் செய்யாமல், வந்தே மாதரம் பாடுங்கள் என்று கட்டாயப்படுத்தி என்ன பலன்? அவர்கள் பூ€ படைத்தவனை வணங்குங்கள் , படைப்புகளை வணங்காதீர்கள்பூ€ என்று அவர்களுக்கு தெரிந்ததை பேனராக எழுதி வைத்துக் கொண்டு இருப்பார்கள்.யஅது மட்டும் அல்ல, இவன் என்ன சொல்றது, நாம என்ன கேட்கிறது, இவன் என்ன கடவுளின் தூதுவனா என்கிற ஆவேசமும் அவர்களுக்கு வரக் கூடும்!நிற்க , இப்ப நம்ப விஜெயேந்திராள், தமிழ்த் தாய் வாழ்த்து பாடும் போது அவாளும் சேர்ந்து பாடாமல் கண்ணை மூடிண்டு உட்கார்ந்து இருந்துட்டா. அது தியானம் என்றுய மடம் அபீசியலா டிக்ளேர் பண்ணயய, அதுதான் மிகச் சிறந்த மரியாதை என்றும் பல பரிவார எழுத்தாளர்கள் சொல்ல, நம்ப அஞ்சா நெஞ்சன் அடலேறு ராஜா ஜி யும் அதையே சொல்லிட்டார். அப்ப அதே ரூல் தான் இஸ்லாமிய சகோதரருக்கும்ய அப்ளையஆகும். அதனால நம்ப ராஜா உடனடியாக பரிவார இயக்கங்கள் அனைவரிடமும் சொல்லி இனிமேல் வந்தே மாதரம் பாடச் சொல்லி யாரையும் கட்டாய படுத்தக் கூடாது என்று பரிவாரங்களின் கட்டப் பஞ்சாயத்து கெஜட்டில் வெளியிட வேண்டும்.இன்றைக்கு விஜேயேந்திராள் தமிழ்த் தாய் வாழ்த்து பாடும் போது எழுந்து நிக்காமல் கண்ணை மூடி உட்கார்ந்து இருந்ததும், அதற்க்கு மடம் கொடுத்த விளக்கமும் எல்லாருக்கும் செல்லும் அண்ணா !யய

thiruchchikkaaran

எங்கள் பகுதியில் இப்போது நடந்த குடி அரசு தின விழாவிற்கு வந்திருந்த பல இஸ்லாமியர்கள் தேசிய கீதம் பாடும் போது எழுந்து நின்றார்கள்!//உண்மையில் அவர்களுக்கு இருப்பது இந்திய வெறுப்பு / காழ்ப்பு மட்டுமே// இது மிகத் தவறான கருத்து. அபாயமான விஷக் கருத்துக்களை உங்கள் மனதில் யாரோ புகுத்தியிருக்கிறார்கள்.

# தமிழ்மணம்

தமிழ்மணம் வலைப்பதிவு மென்னிதழ் சேவையைப் பயன்படுத்தும் உங்களை வரவேற்கிறோம்.

இந்த மென்னிதழ் (soft-copy) வலைப்பதிவுகளை இணையப் பக்கத்துக்கு வெளியே வாசிப்பதை ஏதுவாக்கும் நோக்கில் அளிக்கப்படுகிறது. இதைப் பயன்படுத்துவோர் பின்வரும் விதிமுறைகளுக்கு உட்பட்டே இதைப் பயன்படுத்தவேண்டும்

1. இது தனியாள் ஒருவரின் சொந்த உபயோகத்திற்கு மட்டும் அளிக்கப்படுகிறது. வணிகரீதியான உபயோகம் தடை செய்யப்படுகிறது.
2. இந்த மென்னிதழின் உள்ளடக்கம் இணையத்தில் தமிழ்வலைப்பதிவுகளிலிருந்து திரட்டிமூலம் சேகரிக்கப்பட்டது. அதன் முழு பதிப்புரிமையும் அந்த வலைப்பதிவின் உரிமையாளருக்கே சொந்தம்.
3. இந்த மென்னிதழை வாசிப்பதால் வரக்கூடிய எந்த சட்டபூர்வமான/தார்மீக ரீதியான பிரச்னைகளுக்கும் தமிழ்மணம்.காம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

2700க்கும் மேற்பட்ட வலைப்பதிவுகளில் எழுதப்படும் பல்சுவை, பல்துறை விஷயங்களை அறிந்துகொள்ள தமிழ்மணம்.காம் தளத்துக்கு வாருங்கள்

தேனீ எழுத்துரு அளித்த உமருக்கு நன்றி.
பிடிஎஃப் தயாரிக்கும் நிரல் உதவி: www.fpdf.org